முழுப் பதிப்புரிமையுடையது

# இலங்கை கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர்கள் கழகம்

## திறமை (திறன்கள்) கப்ஸ்ரோன் - 2019 சனவரி

## (SS2) தகவல் தொழில்நுட்பவியல் திறன்கள்

(Information Technology skills)

2019-02-02
பிற்பகல்
[1.45 – 5.00]

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்)**:**

பக்கங்கள் : 07
வினாக்கள் : 07

(1) ***அனுமதிக்கப்பட்ட நேரம் :*** *வாசித்தல் - 15 நிமிடங்கள்*
*எழுதுதல் - 03 மணித்தியாலம்*

(2) ***வினாத்தாள் கட்டமைப்பும் புள்ளிகள் ஒதுக்கீடும் :***

| பகுதி | தேவைப்பாடு | புள்ளிகள் |
|---|---|---|
| A | சகல வினாக்களும் கட்டாயமானவை | 40 |
| B | ஆறு வினாக்களில் நான்கிற்கு மட்டும் விடையளித்தல் வேண்டும். | 60 |
| **மொத்தப் புள்ளிகள்** | | **100** |

(3) *வழங்கப்பட்டுள்ள* ***விடைப் புத்தகத்தில்*** *நீங்கள் விண்ணப்பித்த* ***மொழி மூலத்திலேயே விடைகள்*** *எழுதப்படல் வேண்டும்.*

---

## பகுதி A

### நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

இருபது (20) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 40 புள்ளிகள்)

**Question 01**

*இல. **1.1** தொடக்கம் **1.10** வரையான வினாக்களுக்குப் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க. தெரிவுசெய்யப்பட்ட விடையின் இலக்கத்தை அதற்குரிய வினா இலக்கத்துடன் உமது விடைப் புத்தகத்தில் எழுதுக.*

**1.1** “Queries”, “Reports”, “Forms” என்னும் அம்சங்களை பின்வருவனவற்றுள் எந்த வகைப் பிரயோக மென்பொருளில் (Application software) காணலாம்?

(1) Word Processor
(2) Presentation Manager
(3) Database Management System
(4) Spreadsheet Software

**1.2** கோப்பு நீட்சியான DOCX என்பது பின்வருவனவற்றுள் எந்த வகைப் பிரயோக மென்பொருளுடன் தொடர்புடையது?

(1) Word Processor.
(2) Presentation Manager.
(3) Database Management System.
(4) Spreadsheet Software.

**1.3** கணக்கு நிறைவேற்றுநர் ஒருவர் கொடுப்பனவுத் திகதிகளைக் கொண்ட அட்டவணையொன்றுடன் தொடர்புடைய காசுப் பாய்வுகளின் தொடர் ஒன்றைக் வைத்திருக்கிறார். தொடர்புடைய திகதிகள் காலமுறைப்படி (periodic) இல்லாதிருப்பின், இந்தக் காசுப் பாய்வு அட்டவணையின் உள்ளகத் திரும்பல் வீதத்தைக் (internal rate of return) கணிப்பதற்கு அவர் பின்வரும் மைக்ரோசொப்ற் எக்செல் (Microsoft Excel) பணிக்கூறுகளில் எதனைப் பயன்படுத்த முடியும்?

(1) IRR (2) XIRR (3) PMT (4) PPMT

**1.4** வலப் பக்கத்தில் காட்டப்பட்டுள்ள படமானது பத்திரிகைகள் மற்றும் விளம்பரத் துண்டுப் பிரசுரங்களில் காணப்படுகின்ற பிரசித்தமான ஓர் குறியீடு ஆகும். பின்வருவனவற்றில் இந்தக் குறியீட்டினைக் குறிப்பிடுவதற்குப் பயன்படுத்தக்கூடிய பதம் எது?

(1) MICR Code (2) QR Code (3) Binary Code (4) RFID

**1.5** கணக்கு நிறைவேற்றுநர் ஒருவர் ஒவ்வொரு வில்லையிலும் (slide) குறிப்புகள் உள்ளிடப்பட்ட மைக்ரோசொப்ற் பவர்பொயின்ட் முன்வைப்பு (PowerPoint presentation) ஒன்றினைத் தயாரித்துள்ளார். அவர் மடிக்கணினி (laptop) ஒன்றையும் பல்லூடக எறிகருவி (multimedia projector) ஒன்றையும் பயன்படுத்தி முன்வைப்பினைச் செய்யும்போது குறிப்புகளைப் பார்வையிட வேண்டி ஏற்படின், பவர்பொயின்டிலுள்ள பின்வரும் எந்த அம்சம் அவருக்கு பிரயோசனமுடையதாக இருக்கும்?

(1) Rehearse Timings. (2) Read Narration.

(3) Present Online. (4) Presenter View.

**1.6** பின்வருவனவற்றுள் தற்போது பயன்படுத்தப்படுகின்ற பிரசித்தமான ERP மென்பொருள் எது?

(1) Microsoft Project. (2) Microsoft Access.

(3) SAP. (4) Office 365.

**1.7** பின்வருவனவற்றுள் Cut, Copy, Paste ஆகியவற்றுக்காக மைக்ரோசொப்ற் வேட் (Microsoft Word) இல் **பயன்படுத்தப்படாத** குறுக்கம் (shortcut) எது?

(1) CTRL + C. (2) CTRL + V. (3) CTRL + X. (4) CTRL + Z.

**1.8** பின்வருவனவற்றுள் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இணையத்தளங்களுக்கான மேல் மட்ட களத்தினைப் (Top Level Domain) பிரிதிநிதித்துவம் செய்வது எது?

(1) .lk (2) .lanka (3) .sri (4) .srilanka

**1.9** இலங்கை வாடிக்கையாளர் ஒருவருக்கு, இலங்கை வர்த்தக வங்கி ஒன்றிலிருந்து வெளிநாட்டிலுள்ள வர்த்தக வங்கியொன்றுக்கு பணத்தினை மாற்றுவதற்கான தேவை ஏற்படும்போது, பின்வருவனவற்றுள் எந்தச் சேவையினைப் பயன்படுத்த முடியும்?

(1) Common Electronic Fund Transfer Switch (CEFTS)

(2) Society for Worldwide Interbank Financial Telecommunication (SWIFT)

(3) Traveler’s Cheques

(4) Credit Cards

**1.10** "BitCoin" என்பது பின்வருவனவற்றுள் எதனைக் குறிப்பிடுவதற்காகப் பயன்படுத்தப்படும் பெயராகும்?

(1) இலங்கையிலுள்ள வங்கிகளுக்கிடையில் இலத்திரனியல்ரீதியாக பணத்தினை மாற்றுவதற்கான ஒரு முறை

(2) ஒன்லைன் இணையத்தளங்களில் பிரத்தியேகமாக பயன்படுத்தப்படும் ஒரு கடன் அட்டை

(3) மைக்ரோசொப்ற் எக்செல் இல் நாணயங்களைக் களஞ்சியப்படுத்த (store currencies) பயன்படுத்தப்படும் ஒரு தரவு வடிவம் (data format)

(4) இணையத்தில் பயன்படுத்தப்படும் ஒரு இலத்திரனியல் (டிஜிடல்) நாணயம் (currency)

*இல. **1.11** தொடக்கம் **1.16** வரையான வினாக்களிலுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு அடைப்புக் குறிக்குள் தரப்பட்டுள்ள சொற்களிலிருந்து பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்க. தெரிவு செய்யப்பட்ட சொல்லை, வினா இலக்கத்துடன் உமது விடைப்புத்தகத்தில் எழுதுக:*

**1.11** மைக்ரோசொப்ற் எக்செல் ஆனது முன்னரே வரையறுக்கப்பட்ட நோக்கங்களுக்கான கணிப்பீடுகளை பெறுவதற்காக பயனர்கள் செயற்படுத்தக்கூடிய உள்ளமைவான (in-built) …………………….. *(பணிக்கூறுகளை [Functions] / சூத்திரங்களை [Formulas])* கொண்டிருக்கிறது.

**1.12** மைக்ரோசொப்ற் எக்செல் இல், வேலைத்தாள் நுண்ணறைகள் …………………….. *(ROW + COLUMN / COLUMN + ROW)* ஒழுங்கைப் (order) பயன்படுத்தி இனங்காணப்படுகின்றன.

**1.13** தொடர்புறு (relational) தரவுத்தள முகாமை முறைமையொன்றில், ஒரு தரவுத்தளமானது ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட …………………….. *(Tables / Files)* ஐக் கொண்டிருக்கிறது.

**1.14** மைக்ரோசொப்ற் வேட் இல் மீள் செயற்பாடுகள் (repeat actions) தேவைப்படுமாயின், …………………….. *(Voice Recognition / Macros)* இனைப் பயன்படுத்தி அறிவுறுத்தலை நாங்கள் பதிவுசெய்ய முடியும்.

**1.15** மைக்ரோசொப்ற் அக்ஸஸ் (MS Access) இல், வினவல்களை (Queries) …………………….. *(SQL / HTML)* இனைப் பயன்படுத்தி எழுத முடியும்.

**1.16** இணையத்தளப் பக்கங்களை அணுகும்போது, நெறிமுறை (protocol) ………… *(HTTP / VOIP)* பெரும்பாலும் பயன்படுத்தப்படுகின்றது.

*இல. **1.17** தொடக்கம் **1.20** வரையான பின்வரும் ஒவ்வொரு கூற்றும் **சரியானதா** அல்லது **தவறானதா** என்பதைக் குறிப்பிடுக. தெரிவுசெய்யப்பட்ட விடையை (சரியானது / தவறானது) உமது விடைப்புத்தகத்தில் வினா இலக்கத்தைக் குறிப்பிட்டு அதன் எதிரே எழுதுக.*

**1.17** ஒரு மின்னஞ்சல் (email) முகவரி இரண்டு "@" குறியீடுகளைக் கொண்டிருக்க முடியும்.

**1.18** தகவல் பாதுகாப்புக் கட்டுப்பாடுகளை பௌதிகக் கட்டுப்பாடுகள், தொழில்நுட்பக் கட்டுப்பாடுகள், நிருவாகக் கட்டுப்பாடுகள் என வகைப்படுத்த முடியும்.

**1.19** கணினியில் பவர்பொயின்ட் (PowerPoint) நிறுவப்பட்டிருப்பின் விண்டோஸ் எக்ஸ்புளோரரை (Windows Explorer) இரட்டைச் சொடுக்கு (double clicked) செய்யும்போது பவர்பொயின்ட் முன்வைப்புக் கோப்பானது தன்னியக்கமாக இயங்கும்.

**1.20** நீங்கள் பயன்படுத்திய செல்லிடத் தொலைபேசியை விற்பனை செய்வதற்கு முன், அதில் சேமிக்கப்பட்டிருக்கும் தனிப்பட்ட தரவுகளை அகற்றுவதற்காக தொலைபேசியை factory reset செய்வதற்கு அறிவுறுத்தப்படுகிறது.

(ஒவ்வொன்றுக்கும் 02 புள்ளிகள் வீதம், மொத்தம் 40 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

# பகுதி B

ஏதாவது நான்கு (04) வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

(மொத்தம் 60 புள்ளிகள்)

## வினா 02

தொழில்சார் கல்வி நிறுவகம் ஒன்றின் தரவுத்தளத்திலுள்ள மாணவர் விபரங்களைக் கொண்ட அட்டவணை ஒன்றின் பிரித்தெடுப்பு கீழே காட்டப்பட்டுள்ளது:

| மாணவர் இலக்கம் | குடும்பப் பெயர் | முதற் பெயர் | தே.அ.அ.இல. | பதிவுத் திகதி | சித்தியடைந்த பரீட்சை மட்டங்கள் | உரிய திகதிக்குச் செலுத்தப்பட்ட பதிவு, மற்றும் புதுப்பிப்புக் கட்டணங்கள் (ரூ.) | மாவட்டம் | செயற்பாட்டு (Active) நிலையில் உள்ளனரா என்பது |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1001 | அமரசிறி | சசிரிகா | 931401235V | 2018-05-10 | 1 | 2,000.00 | கொழும்பு | ஆம் |
| 1002 | பின்சிறி | சயனி | 858152400V | 2017-06-01 | 3 | 7,000.00 | கண்டி | ஆம் |
| 1003 | தேவநாயகம் | திரு | 920510400V | 2017-05-01 | 1 | 6,000.00 | யாழ்ப்பாணம் | ஆம் |
| 1004 | செல்வேந்திரன் | செல்வி | 918210450V | 2017-08-01 | 2 | 2,000.00 | நுவரெலியா | இல்லை |
| 1005 | சில்வா | டாமியன் | 902371588V | 2017-06-01 | 2 | 3,000.00 | காலி | இல்லை |
| 1006 | விஜேசிறி | குமார | 931812566V | 2016-06-01 | 2 | 9,000.00 | மாத்தறை | ஆம் |
| 1007 | சாகிர் | ஹஸ்னி | 933551789V | 2017-06-01 | 1 | 6,000.00 | கொழும்பு | ஆம் |
| 1008 | அபயபால | சமன் | 900540370V | 2017-09-01 | 1 | 5,000.00 | திருகோணமலை | ஆம் |

**குறிப்புகள்**:

- பரீட்சை மட்டங்கள் 1, 2, அல்லது 3 ஆக இருக்கலாம்.
- செயற்பாட்டு நிலையிலுள்ள மாணவர்கள் உரிய திகதிக்குச் செலுத்தப்பட்ட பதிவு மற்றும் புதுப்பிப்புக் கட்டண நிலுவைகளைக் (no dues) கொண்டிருக்கவில்லை.

மேலே கிடைக்கப்பெற்ற தரவுகளை மாத்திரம் கருத்திற்கொண்டு, பின்வரும் வினாக்களுக்கு விடை அளிக்குக.

(a) பின்வரும் புலங்கள் (fields) ஒவ்வொன்றிற்கும் மிகப் பொருத்தமான தரவு வகையினை (data type) **அடையாளம் காண்க**:

| புலத்தின் பெயர் | தரவு வகை |
|---|---|
| மாணவர் இலக்கம் | |
| குடும்பப் பெயர் | |
| தே.அ.அ. இலக்கம் | |
| பதிவுத் திகதி | |
| சித்தியடைந்த பரீட்சை மட்டங்கள் | |
| உரிய திகதிக்குச் செலுத்தப்பட்ட பதிவு மற்றும் புதுப்பிப்புக் கட்டணங்கள் | |
| மாவட்டம் | |
| செயற்பாட்டு நிலையில் உள்ளனரா என்பது | |

(08 புள்ளிகள்)

(b) மேலுள்ள புலங்களிலிருந்து lookup fields ஆக எங்களால் பயன்படுத்தக்கூடிய பொருத்தமான புலம் ஒன்றை **அடையாளம் காண்க.** (02 புள்ளிகள்)

(c) நிறுவகமானது செயற்பாட்டு நிலையில் இல்லாத மாணவர்களால் செலுத்தப்பட்ட மொத்தப் பதிவுக் கட்டணங்களை மாவட்ட ரீதியாகக் கணிப்பதற்கு விரும்பியது. மைக்ரோசொப்ற் அக்ஸஸ் ஐப் பயன்படுத்தி இத்தகவல்களை எவ்வாறு பெற்றுக்கொள்ள முடியும் என்பதை **விபரிக்குக.**
*(இந்தக் கணிப்பீட்டிற்குத் தேவையான பிரத்தியோகமான புலங்களை உங்களது விடை அடையாளங்காண வேண்டும் என்பதுடன் அவற்றை அமைப்பதற்குத் தேவையான நிபந்தனைகள் / அமைப்புகளையும் அடையாளங் காணுதல் வேண்டும்)* (05 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

## வினா 03

மைக்ரோசொப்ற் எக்செல் (Microsoft Excel) இலுள்ள பின்வரும் பணிக்கூறுகளால் ஆற்றப்படும் பணிகளை **விபரிக்குக**:

(a) NOW

(b) PV

(c) AND

(d) HYPERLINK

(e) NPV (ஒவ்வொன்றிற்கும் 03 புள்ளிகள் வீதம், மொத்தம் 15 புள்ளிகள்)

## வினா 04

(a) மின்னஞ்சலில் (e-mail) காணப்படுகின்ற பின்வரும் அம்சங்கள் மூலம் ஆற்றப்படுகின்ற பணிகளை **விபரிக்குக**:

(i) Forward

(ii) Signature

(iii) Spam Folder / Spam Mail (06 புள்ளிகள்)

(b) மின்னஞ்சல் ஒன்றை அனுப்புப்போது காணப்படக்கூடிய பின்வரும் அம்சங்களுக்கிடையேயான வேறுபாடுகளைக் **குறிப்பிடுக**:

(i) CC vs BCC

(ii) Reply vs Reply to All (06 புள்ளிகள்)

(c) "மின்னஞ்சல் ஒன்றை அனுப்பும்போது, எந்த வகையான ஒரு கோப்பையும் எந்த அளவிலான ஒரு கோப்பையும் எங்களால் இணைத்து அனுப்ப முடியும்".

நீங்கள் இந்தக் கூற்றுடன் இணங்குகிறீர்களா, உங்கள் விடையை நியாயப்படுத்துக. (03 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

## வினா 05

(a) வியாபார நிறுவனமொன்று இணயத்தைப் (internet) பயன்படுத்துவதால் ஏற்படக்கூடிய நன்மைகள் மூன்றினை (03) **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(b) பாரம்பரிய வங்கி நடவடிக்கைகளை விட இணையம் அல்லது மொபைல் வங்கிச் சேவைகளைப் (mobile banking) பயன்படுத்துவதன் அனுகூலங்கள் மூன்றினைக் (03) **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(c) உங்களுடைய நண்பர் அவருடைய இணைய வங்கிச் சேவையின் கடவுச்சொல்லை மறந்துவிட்டார். உங்களது நண்பர் அவரது கணக்கை மீளவும் அணுகுவதற்கு வசதிசெய்யுமுகமாக இலங்கையிலுள்ள வர்த்தக வங்கிகளால் தற்போது பின்பற்றப்படுகின்ற நடைமுறைகள் இரண்டினைக் (02) **கூறுக.**

(03 புள்ளிகள்)

(d) நிறுவன வளத் திட்டமிடல் (ERP) மென்பொருளின் ஊடாக நிறுவனமொன்று பெற்றுக்கொள்ளக்கூடிய மதிப்புச் சேர்த்தல்கள் (value additions) மூன்றினைக் (03) **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

## வினா 06

(a) மைக்ரோசொப்ற் வேட் இலுள்ள பின்வரும் அம்சங்களால் ஆற்றப்படுகின்ற பணிகளை **விபரிக்குக:**

(i) Page Orientation

(ii) Format Painter

(iii) Show / Hide

(iv) AutoText

(v) Print Preview (ஒவ்வொன்றிற்கும் 02 புள்ளிகள் வீதம், மொத்தம் 10 புள்ளிகள்)


(b) மெயில் மேஜ் (Mail merge) என்பது மைக்ரோசொப்ற் வேட் இலுள்ள மிகப் பிரயோசனமான அம்சங்களில் ஒன்றாகும். இது எப்பொழுது பிரயோசனமானதாக இருக்கிறது என்பதை **விளக்குவதுடன்**, மெயில் மேஜ் செயன்முறையொன்றைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான படிமுறைகளையும் **பட்டியற்படுத்துக.** (05 புள்ளிகள்)


(மொத்தம் 15 புள்ளிகள்)

## வினா 07


புகழ்பெற்ற பல்பொருள் அங்காடி ஒன்றின் வருடாந்த அறிக்கையை முன்வைப்புச் செய்வதற்காக மாணவன் ஒருவன் முன்வைப்பொன்றினை (presentation) உருவாக்கியுள்ளான். கீழே 1 தொடக்கம் 6 வரை இலக்கமிடப்பட்டுள்ள வில்லைகள் (slides) அந்த முன்வைப்பிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டவை ஆகும்.





| Category | Q1 (Rs. Mln) | Q2 (Rs. Mln) | Q3 (Rs. Mln) |
|---|---|---|---|
| Beverages | 510 | 600 | 620 |
| Bakery | 400 | 425 | 500 |
| Canned Goods | 300 | 200 | 100 |
| Dairy | 150 | 170 | 200 |
| Frozen Foods | 800 | 820 | 850 |
| Fish and Meat | 500 | 400 | 400 |
| Produce | 400 | 300 | 350 |
| Personal Care | 350 | 250 | 250 |
| Other | 850 | 750 | 650 |
| Total | 4260 | 3915 | 3920 |








நீங்கள் பவர்பொயின்ட் 2016 இனைப் பயன்படுத்தி அந்த ஆறு வில்லைகளையும் மீள உருவாக்க வேண்டியுள்ளதாகக் கருதுக. கீழே (a) தொடக்கம் (g) வரை இனங்காணப்பட்ட பணிகளைப் பூர்த்தி செய்வதற்கு நீங்கள் பயன்படுத்தக்கூடிய அம்சங்களை (features) **விபரிக்குக.** வலது பக்கத்தில் காட்டப்பட்டுள்ள படத்தின் (தள்ளுவண்டி குறியீடு) கோப்பானது இந்தப் பணிக்காக நீங்கள் பயன்படுத்துகின்ற கணினியின் வன் தட்டில் (hard disk) சேமிக்கப்பட்டுள்ளது எனவும் ஆறு வெறுமையான வில்லைகளைக் (blank slides) கொண்ட பவர்பொயின்ட் வில்லைக் காட்சியொன்றும் (Power point slideshow) உங்களுக்கு உள்ளது எனவும் கருதிக்கொள்க:

*(நீங்கள் எழுத்துருவின் அளவு, நிறம் அல்லது எழுத்துரு முகப்பு மாற்றங்கள் ஆகியவற்றைக் குறிப்பிட **வேண்டியதில்லை**).*

(a) வருடாந்த அறிக்கையின் (Annual Report 2018) தலைப்பு வில்லையில் காட்டப்பட்டுள்ளவாறு தள்ளுவண்டி குறியீட்டைச் சேர்த்தல் (02 புள்ளிகள்)

(b) முன்வைப்பு நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேளையில், முன்வைப்புச் செய்பவர் வில்லை **1** இலுள்ள தள்ளுவண்டி குறியீட்டின்மீது சொடுக்கும்போது முன்வைப்பானது வில்லை **6** இற்கு நேரடியாக செல்வதை உறுதிப்படுத்தல் (03 புள்ளிகள்)

(c) களஞ்சிய அமைவிடங்கள் காட்டப்பட்டுள்ள வில்லையில் (Store Locations slide) இடங்களை நிரற்படுத்துவதற்காக தன்னியக்கமாகத் (automatically) தோன்றும் வகையில் படத்திலுள்ளவாறு தள்ளுவண்டி குறியீடுகளைச் சேர்த்தல். வில்லை **2** இலுள்ள உரை (text) வில்லையில் ஏற்கனவே காணப்படுவதாக நீங்கள் கருதிக்கொள்ளலாம். (02 புள்ளிகள்)

(d) வருமான வில்லையில் (Revenue 2018 slide) காட்சியளிப்பதைப் போன்று வருமானத் தகவல்களைச் சேர்த்தல்

*(குறிப்பு : சம்பந்தப்பட்ட தரவுகள் மைக்ரோசொப்ற் எக்செல் வேலைப் புத்தகத்தில் (MS Excel Workbook) இருப்பதாகக் கருதிக்கொள்ளலாம்)* (02 புள்ளிகள்)

(e) வில்லை **4** இல் காட்சியளிப்தைப் போன்று வரைபடமொன்றைக் (chart) காட்சிப்படுத்தல்

*(குறிப்பு : சம்பந்தப்பட்ட தரவுகள் முன்னைய உப வினா (d) இல் பயன்படுத்திய அதே மைக்ரோசொப்ற் எக்செல் வேலைப்புத்தகத்தில் இருப்பதாகக் கருதிக்கொள்ளலாம்.)*

(02 புள்ளிகள்)

(f) வில்லை **5** இல் காட்சியளிப்தைப் போன்று வரைபடமொன்றைக் காட்சிப்படுத்தல்

*(குறிப்பு : சம்பந்தப்பட்ட தரவுகள் மைக்ரோசொப்ற் வேட் (MS Word) ஆவணமொன்றில் இருப்பதாகக் கருதிக்கொள்ளலாம்.)* (02 புள்ளிகள்)

(g) வில்லை 6 இன் தலைப்பாகவுள்ள “Short Term Plans” என்னும் உரையைக் காட்சிப்படுத்தல்

(02 புள்ளிகள்)

(மொத்தம் 15 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*